# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : DW-1
Date : 11.03.2026
Case No. : **O.S.** 24/2024
Nationality : Indian
Name : விஜயலட்சுமி
Religion :
Father's/Husband's Name : பாஸ்கர்
Age : 35
Village : திருப்பனந்தாள்
Taluk :திருவிடைமருதூர்

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

ஞான சௌந்தரி ஹரண்யா மனோன்மணி ஆகியோர்கள் தாக்கல் செய்த இந்த வழக்கு விவரம் எனக்கு தெரியும், எனது மாமனார் பெயரில் உள்ள சொத்துக்களில் ஏற்பட்ட சொத்து பிரச்சனைக்காக வழக்கு போட்டுள்ளார்கள். எனது மாமனார் பெயரில் உள்ள சொத்துக்களில் எனது மூன்று குழந்தைகளுக்கும் உரிமை உள்ளது என்று நானும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். என் மாமனார் மாமியார் இருவரும் சேர்ந்து எங்களுக்கு திருமணம் செய்து வைக்கவில்லை. 2012 ம் ஆண்டு வைகாசி மாதம் 24 ம் தேதி சுவாமிமலை முருகன் கோவிலில் வைத்து திருமணம் செய்து கொண்டோம். ஆங்கில மாதம் நினைவில்லை தேதி 24. நாங்கள் இருவர் மட்டும் தனியாக திருமணம் செய்து கொண்டோம். நான் திருமணம் செய்து கொண்டதற்கான திருமண பத்திரிக்கை கோவிலில் பதிவு செய்ததற்கான சான்றுகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குறையில் 2012 ம் ஆண்டு வைகாசி மாதம் 24 ம் தேதி சுவாமிமலையில் திருமணம் செய்யவில்லை என்றால் சரிதான். எனது 3 குழந்தைகள் பிறந்தபோது மருத்துவமனையில் கணவர் என்ற முறையில் கையெழுத்து செய்துள்ளார்.

பள்ளியில் சேர்க்கும் போதும் கையெழுத்து செய்துள்ளார். மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். குழந்தை பிறந்த பதிவிற்கான விவரம் நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். என் கணவர் உடன் இருந்தார் என்றால் சரிதான். மருத்துவமனையில் என்னை பிரசவத்திற்கு சேர்த்த போது விவரம் சொன்னது என் கணவர் தான். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் இறந்து போன எனது கணவருக்குத்தான் எனது மூன்று குழந்தைகள் வாரிசுகள் என்று என் எதிர் வழக்குறையில் கூறியுள்ளதற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்த வில்லை என்றால் சரிதான். எனது மூத்த மகளுக்கு ஆதார் கார்டு பதிவு செய்து வாங்கியது எனது கணவர் மற்ற இரண்டு குழந்தைகளுக்கு நான் வாங்கினே். நானும் எனது கணவரும் தனியாக குடித்தனம் நடத்தியதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் தமிழ்நாடு போக்கு வரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து பணியிடைநீக்கம் செய்யப்பட்டார் என்றால் சரிதான். எனது கணவருக்கு ஊதியம் இல்லாத காலத்தில் 1வது வாதிதான் பராமரித்தார் என்றால் சரியல்ல. நான் தான் பராமரித்தேன். என் கணவருக்கு எந்த வித வருமானம் இல்லை என்றால் சரிதான். நான் குழுவில் கடன் வாங்கி குடும்பம் நடத்தினோம். எனது கணவரான பாஸ்கர் எந்த காலத்திலும் என்னுடன் கணவன் மனைவியாக குடும்பம் நடத்தவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மூன்று குழந்தைகளும் எனது கணவர் பாஸ்கருக்கு பிறக்கவில்லை என்றால் சரியல்ல. நானும் எனது குழந்தைகளும் எனது கணவரின் இறுதி சடங்கிலும் ஈமகிருகை சடங்கிலும் நான் கலந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. எனது கணவரின் உடன் பிறந்த அண்ணன் மனோகரன் தான் தற்போது எங்களுக்கு உதவி செய்து வருகிறார் என்றால் சரிதான். மனோகருக்கும் 1ம் வாதிக்கும் கருத்து வேறுபாடு உண்டு என்றால் சரிதான். மனோகரன் அரசு மருத்துவராக

பணியாற்றினார் என்றால் சரிதான். மனோகரின் தூண்டுதலின் பெயரில் 1ம் வாதியை பழிவாங்க வேண்டி எனது மூன்று குழந்தைகளுக்கு தகப்பனார் பாஸ்கர் என்று பொய்யான தகவலை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. கும்பகோணம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் மனோகர் தாக்கல் செய்துள்ள வழக்கில் என்னையும் தரப்பினராக சேர்த்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் நான் மோசடியாக உற்பத்தி செய்த ஆவணங்கள் என்றாலும் மேற்படி ஆவணத்திற்கும் பாஸ்கருக்குதம் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வாதிகள் மட்டும் தான் இறந்த பாஸ்கரின் வாரிசுகள் என்றாலும் என் குழந்தைகளுக்கு எந்த வித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல.

பிராதுபடி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- P. Rangeswari,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur (FAC).